அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

| 23 | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ........................

அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

காலம் : 2 மணி

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக
- ❖ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ❖ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x ) இடுவதன் மூலம் காட்டுக.
- ❖ 31 முதல் 50 வரையான வினாக்களுக்கு இவ்வினாத்தாளிலேயே விடையளிக்க.
- ❖ ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

❖ **1 முதல் 17 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

01. அரசியல் என்பது,

A அதிகாரப் போராட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரயோகச் செயன்முறையாகும்.
B அரசியல் மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையில் நேரடியான தொர்பு காணப்படுகின்றது.
C அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த சமூகத்தினுள் காணமுடியாது
D எதிர்மறை கருத்தியல்கள் மற்றும் அரசியல் செயற்பாடுகள் காணப்படாத இடத்தில் உண்மையான அரசியல் காணப்படாது.
E சமூகத்திலுள்ள சகல மனிதர்களும் பங்குபற்றி, அதிகாரத்துக்காகச் செய்யும் ஒரு விளையாட்டாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

02. மனிதர் முறைசாரா விதத்தில் அரசியலைக் கற்கும் வழிமுறைகளாவன

A குடும்பம்
B சகபாடிகள்
C வெகுசன ஊடகங்கள்
D அரசறிவியல் பாடத்தை கற்கைநெறியாகக் கற்றல்
E அரசாங்கம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

03. அரசியலில் மிகவும் முக்கியத்துவம் பெறும் விடயங்களாவன.

A அரசியல் விஞ்ஞானம்
B அரசியல் கட்சியாகும்
C அரசியல்வாதிகளாகும்.
D எதிர்மறைக் கருத்தியலாகும்
E அரசியல் கட்சிகளின் கொள்கைகளாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

04. அரசியலில் ஈடுபடுபவர்களால் ஆற்றப்படும் செயற்பாடுகளாவன.

A அரசாங்க அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக செயற்படல்

B நீதிமன்ற செயற்பாடுகளை குறைத்தல்

C தேர்தல்களில் பங்குபற்றல்

D அரசியல் கட்சிகளுக்கு சார்பாக செயற்படுதல்

E அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

05. பிரஜை அரசியலுடன் தொர்புபடுவது,

A ஆட்சியாளர்களை நியமிப்பதன் மூலமாகும்.

B ஆட்சியாளர்களுக்கு ஆட்சி செய்வதற்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலமாகும்.

C வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்கள் மூலமாகும்.

D அரசியல் கட்சியில் கட்சி அங்கத்தவர்களாக செயற்படுதலாகும்.

E நிறைவேற்று அதிகாரத்தை நேரடியாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

06. அரசியல் விஞ்ஞானம்

A அரசு தொடர்பாக ஆராயும் விஞ்ஞானமாகும்.

B லஸ்கியின் கருத்துப்படி உலகில் பழமை வாய்ந்த பாடமாகும்.

C ஒழுங்கமைந்த சமூகத்தில் அரசியல் ரீதியாக செய்யப்படும் செயற்பாட்டை ஆய்வு செய்வதாகும்.

D அதிகாரத்திற்காக செய்யப்படும் போராட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ஆய்வாகும்.

E உலகில் பழமை வாய்ந்த சமூக விஞ்ஞானமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

07. அரசியல் விஞ்ஞானம்

A அரசறிவியல் கற்கை அரம்பமானது சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாகும்.

B இதன் பாடப்பரப்பு காலத்துக்குக் காலம் மாற்றமடையக் கூடியது

C அரசறிவியலைக் கற்றவர் தான் அரசியல் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

D அரசறிவியலின் தோற்றம் அரசியலின் தோற்றத்தோடு நேரடியாக தொடர்புபடுகின்றது.

E அரசறிவியலை சரியாகக் கற்றவர் சிறந்த பிரஜை ஆகலாம்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

08. ஆட்சிச் செயற்பாட்டில் உள்ளடங்கும் விடயங்களாவன.

A சமூக பொருளாதார அபிவிருத்திக்கான சட்டங்களை இயற்றுவதாகும்.

B சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும்.

C சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

D நாடுகளுடனான தொடர்புகளில் இருந்து விலகி நிலையான இருப்பை உறுதிப்படுத்துதல்.

E மோதல் முகாமைத்துவம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

09. அரசு மற்றும் அரசாங்கம் ஒழுங்கமைந்திருக்கும் நான்கு கருத்தியல்களும் பின்வருமாறு

A சட்டவாக்க நிறுவனம் B சிவில் சமூகம்

C நீதித்துறை நிறுவனம் D நிறைவேற்று நிறுவனம்

E பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான நிறுவனம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

10. அரசியல் நிறுவனம்

A எந்தவொரு சமூகத்திலும் நிறுவனமயமாக இயங்குவதாகும்.
B அரசு மற்றும் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பினை வெளிக்காட்டும்.
C அரசியல் அதிகாரத்துடனும் அரசியல் செயற்பாட்டுடனும் தொடர்பினைக் கொண்டுள்ளது.
D அரசியல், விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட மாட்டாது.
E நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கிடையிலான தொடர்பை ஆராய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

11. அரசியல் கட்சி

A சிதறியிருக்கும் மக்கள் கருத்துக்களை ஒழுங்குபடுத்தும்.
B அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு செயற்படும்.
C கருத்தியல் அல்லது கொள்கைகளில் தனித்துவம் இல்லை
D அரசியல் தலைவர்களை உருவாக்குவதற்கு பங்காற்றுகின்றது.
E அரசாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேர்தலை அல்லது வேறு ஊடகத்தை பயன்படுத்தும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

12. ஒப்பீட்டு அணுகுமுறை

A அரசியல் நிகழ்வு ஒன்றை மட்டுமல்லாமல் பலதையும் ஒப்பிட்டு வெளிப்படுத்துவதாகும்.
B ஒப்பீட்டு அணுகுமுறையில் மூன்று பிரதான பிரிவுகள் காணப்படுகின்றன.
C அரசியல் தொடர்பாக புரிந்து கொள்வதற்கு வரலாற்றை ஆய்வு செய்வது பலன்தராது.
D கிரேக்க நகர அரசு தொடர்பாக அரிஸ்டோட்டில் கலந்துரையாடியது இந்த அணுகுமுறையிலாகும்.
E முன்மாதிரிகள் மூலம் ஒப்பீட்டுக் கற்கைகளில் ஈடுபட முடியாது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

13. பாராளுமன்றின் இருப்புக்கு அவசியமான காரணிகளாவன

A ஜனநாயகம்
B நீதிமன்றத்தை கட்டுப்படுதும் நிறைவேற்றுத்துறை இருத்தல்
C சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்
D மக்கள் இறைமை
E பாராளுமன்ற சட்டதிட்டங்கள்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

14. தேசிய வாதம்

A இதன் ஆரம்பம் பிரான்ஸிய புரட்சியாகும்.
B வரையறுக்கப்பட்ட ஆள்புல எல்லைக்குள் வாழும் சகல மக்களும் ஒரே தேசியம் என்ற எண்ணக்கருவாகும்.
C பொதுவான வரலாறு, கலாச்சாரம், சம்பிரதாயங்கள் போன்ற கலாச்சாரக் காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
D தேசிய அரசு தோற்றம் பெறுவதில் செல்வாக்குக் செலுத்திய முக்கிய காரணியாகும்.
E வகுப்புவாதம் மேலோங்குவதற்கு காரணமாக அமைந்தது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

15. அமுக்கக் குழுக்கள்

A அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் செயற்படுகின்றது.
B அழுத்தம் பொடுப்பதின் ஊடாக தமது அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும்.
C H. சிக்லரின் கருத்துப்படி அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுக்க ஒன்றுபட்ட குழுவாகும்.
D G.A. ஆல்மண்ட் இன் கருத்துப்படி நான்கு பிரிவுகளாக பிரியும்.
E ஆசைக் குழுக்கள் என்றும் குறிப்பிட முடியும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

16. அரசியல் நடத்தை

A அரசியல் துறையில் பிரஜையின் நடத்தை தொடர்பாக ஆய்வு செய்கின்றது.
B பிரஜை அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக ஆய்வு செய்கின்றது.
C தேர்தலில் வாக்கினைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தாதிருத்தலுடன் தொடர்புபட்டது.
D அரசியல் கட்சிகளின் அங்கத்தவராக இருத்தல் அல்லது இல்லாதிருத்தல் தொடர்பாக ஆய்வு செய்கின்றது.
E நாளாந்த அரசியல் நிகழ்வுகள் குறித்து ஈடுபாடு காட்டாமல் இருத்தல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

17. அரசியல் கருத்தியல்

A அரசியல் நிறுவனங்கள், நடைமுறைகள், நடத்தைகள் மற்றும் ஆட்சி செயற்பாடுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் சாதனமாகும்.
B தற்போதய உலக அரசியலின் இருப்பு, அரசியல் தோற்றப்பாடுகள் மற்றும் அரச சொள்கைகளை ஒழுங்கமைப்பது தொடர்பிலான பிரதான கருத்தியல்களோடு தொடர்புபட்டது.
C அரசியல் கட்சிகளின் கொள்கைகளுக்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ அழுத்தம் கொடுக்காது.
D மக்களின் அரசியல் தீர்மானங்கள், நடத்தைகள் மற்றும் அறிவுஞானம் ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் கருத்துக்களின் தொகுதியாகும்.
E அரசியல் தோற்றப்பாடுகள் தொடர்பாக கல்விசார் ஆய்வுக்கு உட்படுத்தும் ஒரு பிரிவாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

❖ **18 முதல் 23 வரையான வினாக்களில் ஒரு கூற்று பிழையானது. பிழையான கூற்றை தெரிவு செய்க.**

18. தத்துவார்த்த அணுகுமுறை

1. அரசறிவியலை ஆய்வு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட முதல் அணுகுமுறையாகும்.
2. பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் ஆகியோர் இதன் முன்னோடிகளாவர்
3. சாதகம், பாதகம் எனும் வகையில் பெறுமானம் சார் தீர்வினைத் தரும்
4. நடைபெற்ற விடயத்தை அவ்வாறே பாதுகாத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
5. இருப்பதை ஆய்வு செய்து அது மாறுமிடத்து எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை தெளிவுப்படுத்துகிறது (........)

19. பன்மைத்துவ அணுகுமுறை

1. அரசறிவியலுக்கு அப்பாலுள்ள துறைகளின் கோட்பாடு மற்றும் எண்ணக்கருக்களை அரசியல் ஆய்வுக்கு பயன்படுத்துகிறது.
2. கிரேக்க யுகத்தில் அரசறிவியல் புவியியல் பாடத்தோடு தொடர்புபட்டிருந்தது.
3. அரசறிவியல் சுயமாக மேலெழுந்த ஒரு கற்கை நெறியல்ல. அது சமூகத்தினாலேயே மேலெழுந்துள்ளது.
4. பன்மைவாதம் என்ற எண்ணக்கருவில் மூன்று விளக்கங்கள் உள்ளன.
5. 20ஆம் நூற்றாண்டில் உளவியலுடன் தொடர்புபட்டிருந்தது. (........)

20. விஞ்ஞான அணுகுமுறை

1. விஞ்ஞான ரீதியான மற்றும் மெய்ப்பிக்கக் கூடிய முறைகளை பயன்படுத்துவதாகும்.
2. விஞ்ஞான ரீதியாக கட்டியெழுப்பப்பட்ட அரசியல் கட்டமைப்பு தனிப்பட்ட நம்பிக்கைகளை கொண்டிருக்கக் கூடாது
3. பெறுமதி சார் தீர்மானங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும்.
4. விஞ்ஞான அணுகுமுறையும் நடத்தைவாத அணுகுமுறையும் ஒன்றாக சேர்ந்து ஆரம்பமானது
5. இதன் பொற்காலம் 16ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியாகும். (........)

21. சமூகவியல் அணுகுமுறை

1. சமூகவியலும் அரசறிவியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகும்.
2. அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு சமூகவியல் மற்றும் மானிடவியல் அணுகுமுறைகள் முக்கியமானவையாகும்.
3. ஹேகல் மற்றும் ஜோன் லொக் ஆகியோர் இந்தக் கருத்தியல் தொடர்பாக பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளனர்.
4. மனித செயற்பாடுகளில் அரசியல் பிரிவுகளை விளங்கிக் கொள்வதற்கு முழு சமூகத்தின் ஊடாக ஆய்வு செய்ய வேண்டும்.
5. அரசறிவியலும் சமூகவியலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்பட்டதோடு அவை இரண்டு வெவ்வேறான பாடங்களாக பிரிந்து வளர்ச்சியடைய ஆரம்பித்தது 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலாகும். (........)

22. பெண்ணியல்வாத அணுகுமுறை
   1. அரசியல் என்பது பொது மக்கள் அமைப்பின் மூலம் நடைபெறும் செயற்பாடு என்பதை நிராகரித்து தனியார் பங்குபற்றலில் நடைபெறும் ஒரு துறையயாக கருதுகின்றது.
   2. 1940 தசாப்தங்களில் உலக மகா யுத்தத்தின் அனுபவங்களின் மூலம் கட்டியெழுப்பப்பட்டது.
   3. பாரம்பரிய அரசியலில் பெண்ணியல்வாத அணுகுமுறையினால் புதியதொரு கருத்தியல் உருவானது.
   4. மனித மற்றும் சமூக விடுதலை தொடர்பான கருத்துடன் பெண் விடுதலை என்ற பெயரிலான புதிய கருத்தியலைக் கொண்ட கூட்டமும் சேர்ந்து கொண்டது
   5. அரசறிவியலில் அதி முக்கிய அடையாள எண்ணக்கருக்களில் ஒன்றாக ஆண், பெண், பால்நிலை ஆகியவற்றை இணைத்துக்கொள்ளுதல். (........)

23. இறைமை தொடர்பான கோட்பாட்டிற்கு அமைவாக
   1. அரசு பெற்றிருக்கும் உயர்வான அதிகாரம் தொடர்பான அரசியல் எண்ணக்கருவாகும்.
   2. இறைமை உள் இறைமை, வெளி இறைமை என இரு வகைப்படும்.
   3. முதன் முதலில் ஜீன் போடினினால் முன்வைக்கப்பட்டது.
   4. ஆரம்பம் முதல் இன்றுவரை சவாலுக்கு உட்படுத்தப்படாத எண்ணக்கருக்களுள் ஒன்றாகும்.
   5. இறைமை அதிகாரம் முழுமையானது பிரிக்க முடியாது. (........)

❖ **24 முதல் 30 வரையான வினாக்களில் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

24. சமவுடைமைவாத அரசொன்றில்

A வர்க்கமற்ற சமூக அமைப்பு காணப்படுகின்றது.
B தனியார் முயற்சிக்குப் பதிலாக அரச ஆதிபத்தியம் நடைமுறைப்படுத்தப்படும்.
C தொழிலாளர் வர்க்கக் கட்டளையுடன் ஆட்சி முறையொன்று காணப்படும்.
D சமூகத்தின் அடிப்படையாகக் கருதப்படுவது தனியார்மயப்படுத்தலாகும்.
E உழைப்புச் சுரண்டல் முறையற்ற சமூக அமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

25. தாராண்மைவாதத்தின் படி

A நவ தாராண்மைவாத அரசு வரை நீண்டதொரு வரலாற்றை கொண்டுள்ளது.
B தலையிடா அரசு இதன் ஆரம்ப நிலையாகும்.
C முதல் சகாப்தம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் தோற்றம் பெற்றதே நலன்புரி அரசாகும்.
D தேசிய சந்தைப்பொருளாதாரம் சர்வதேச நிறுவனங்களினால் இயக்கப்படுவது நவ தாராண்மைவாத அரச முறையிலாகும்.
E நவ தாராண்மைவாதம் முழுமையாகத் தனியார்மயப்படுத்தலை நிராகரிக்கிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5.ABCE (........)

26. மாக்ஸிஸ வாத்தின் படி

A அரசு உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தும் காரணியாக பொருளாதாரம் காணப்படுகின்றது.
B நீட்சே மற்றும் மக்கியாவல்லி ஆகிய சிந்தனையாளர்கள் இதன் ஆரம்ப கர்த்தாக்கள் ஆவர்
C வர்க்கம் உள்ள சமூகத்தில் அரசு அவசியமானது
D வர்க்கமற்ற சமூகம் எதிர்காலத்தில் தோற்றம் பெறும். அதில் அரசு உதிர்ந்து விடும்.
E இறந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர்கால அடிப்படையில் சமூகத்தை ஆறு கட்டங்களாக வேறுபடுத்தி நோக்குகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

27. பாசிசவாத அரசுக்கு அமைய

A மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பூரண சுதந்திரத்துக்கு உரித்துடையவனாவான்

B முதலில் தோற்றம் பெற்றது இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஆகும்.

C இனத்தின் சிருஷ்டியே அரசாகும்.

D தோற்றம் பெற நீட்சே முன்வைத்த **அதிசிறப்பு மனிதன்** என்ற கருத்து தாக்கம் செலுத்தியது

E அரசின் சிருஷ்டியே ஆட்சியாளன் ஆவான்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

28. சமூக ஒப்பந்தக்கோட்பாட்டின் படி

A சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாகவே அரசு தோற்றம் பெற்றது.

B இக்கோட்பாட்டின் ஆரம்பகர்த்தா ஹொப்ஸ், லொக், ரூஸோ ஆகிய மூவருமாவர்

C ஆரம்பத்தில் ஒப்பந்தம் ஒரு சாரார் மத்தியில் இடம் பெற்றாலும் பின்னர் அது இரு சாராருக்கு இடையில் இடம்பெற்றது.

D இயல்புநிலை சமூகம் தொடர்பான கருத்தும் இதனுடன் முன்வைக்கப்பட்டது.

E அரசு தோற்றம் பெற்றதற்கான காரணம் இரண்டு வகுப்பினர்களுக்கு இடையில் இடம்பெற்ற ஒப்பந்தமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

29. அரசின் வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசம்

A நிர்மானிக்கப்பட்டதாகவோ அல்லது இயற்கையானதாகவோ அல்லது இவை இரண்டின் சேர்க்கையானதாகவோ இருக்க முடியும்.

B நிலப் பிரதேசம், கடல், மற்றும் ஆகாய எல்லைகளை உள்ளடக்கியிருக்கும்.

C தேசாபிமானம் ஏற்படுவதில் பிரஜைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகும்.

D நவீன அரசுகளில் ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்றவையாகும்.

E பிரஜை ஒருவர் தான் எந்த நாட்டவர் என நிறுவுவதற்கு இது அவசியமில்லை

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

30. பின்காலனித்துவ அரசு தொடர்பான கருத்து,

A ஹம்ஸா அலாவியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு அரச முறையாகும்.

B இந்த அரசுகளில் முறையாக ஜனநாயகப் பரிமாற்றம் இடம்பெறவில்லை

C அரசியல் கட்சிகளின் செயற்பாட்டை விஞ்சிவிடக்கூடிய இராணுவக் கட்டமைப்பு ஒன்று காணப்படுகின்றது.

D இந்நாடுகளை பொருளாதார அபிவிருத்தி மிகவும் வேகமாக ஆக்கிரமித்துள்ளது.

E காலனித்துவ அரச கட்டமைப்பு அவ்வாறே அதில் நடைமுறையில் உள்ளதை காணமுடிகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

31. கிரேக்க கால அரசியல் சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களை பெயரிடுக

1. ..........................................................................................................................................

2. ..........................................................................................................................................

32. அரசறிவியலில் பயன்படுத்தப்படும் ஆய்வு அணுகுமுறைகள் இரண்டு தருக.

1. ..........................................................................................................................................

2. ..........................................................................................................................................

33. அரசியல் சமூக அமைப்பில் மனிதர் அரசியலை அறிந்து கொள்வதற்கான இரு முறைகள் உள்ளன. அவற்றை பெயரிடுக.

1. ..........................................................................................................................................

2. ..........................................................................................................................................

34. கல்வித்துறை மூலம் கற்கப்படுகின்ற அரசியலானது பல்வேறு பிரிவுகளில் காணப்படுகின்றது. அவற்றுள் இரண்டை குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

35. அரசறிவியலில் பயன்படுத்தப்படும் நடத்தைவாத அணுகுமுறையின் இரு பண்புகளை குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

36. சமூகத்தின் அரசியல் நிறுவனங்கள், பிரஜைகளின் அரசியல் நடத்தைகள் மற்றும் அரசாட்சிச் செயற்பாடுகள் ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் அரசியல் கருத்தியல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

37. நவீன தேசிய அரசு உருவாக்கம் உடனடியாக நிகழ்ந்த ஒன்றல்ல. தேசிய அரசு உருவான கட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

38. சமூக ஒப்பந்தவாதத்தின் படி இயல்புநிலைச் சமூகம் அமைதியானது எனக் குறிப்பிட்ட அரசியல் அறிஞரையும் இயல்புநிலைச் சமூகம் குழப்பகரமானது எனக்குறிப்பிட்ட அறிஞரையும் முறையே குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

39. மாக்ஸிய வாதத்தின் படி வகுப்புவாத சமூக முறையே நடைமுறையிலுள்ளது. அவர்களின் வாதத்தின்படி இறுதியாக உருவாகும் இரு சமூக முறைகளையும் குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

40. கீழ்வரும் இரு கூற்றுக்களின் மூலம் குறிப்பிடப்படும் இரு அரசியல் நிறுவனங்களையும் முறையே குறிப்பிடுக.

1."சமூகத்தில் நடைமுறையில் உள்ள உயர்ந்த அதிகாரத்தினையுடைய நிரந்தர நிறுவனமாகும்."

2. "அதிகார பலத்தினை பிரயோகிக்கும் மக்களினால் தெரிவு செய்யப்படும் மாற்றங்களுக்கு உட்படும் நிறுவனமாகும்"

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

41. அரசறிவியலின் பாட உள்ளடக்கம் காலத்துக்குக் காலம் விரிவடைந்து வருகிறது. இவ்வாறு பாடப்பரப்பினுள் சேர்ந்துள்ள உப துறைகள் இரண்டினை பெயரிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

42. அரசியல் கட்சிகளின் உறுப்புரிமை, கொள்கை மற்றும் அதன் செயற்பாடுகள் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தலாம். இவ்வாறான வகைப்படுத்தல்கள் இரண்டினை குறிப்பிடுக.

1. ............................................................................................................................................................

2. ............................................................................................................................................................

43. நவீன தேசிய அரசுகளில் காணப்படும் முக்கிய பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.'

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

44. உலகமயமாக்கலினால் தேசிய அரசுகளுக்கு சவால்விடக் கூடிய இரு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை எவை?

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

45. கிரேக்க நகர அரசு முறையில் அரசியல் நடவடிக்கைகளில் அதிகமான தரப்பினர் தொடர்புபடவில்லை. அவர்களில் இரு பிரிவினரைத் தருக.

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

46. தாராண்மை ஜனநாயக அரசில் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசியல் கொள்கையை முறையே எழுதுக.

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

47. கீழ்வரும் இரு கூற்றுக்களில் நவீன உலகில் நடைமுறையில் உள்ள அரச முறைகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு முறையே பெயரிடுக.

"மக்களினால் மக்களுக்காக உதயமாகி நடைமுறைப்படுத்தப்படும் மக்களின் அரசாங்கம்"

"உயரிய தன்மையுடைய, சிரேஷ்ட தன்மை, எதேட்சையதிகாரம், இனவாதம், இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாக்க கொண்ட அரசு"

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

48. கிரேக்க நகர அரசு முறையில் ஆரம்பமான மக்கள் ஜனநாயக மூலக் கொள்கை இரண்டினைப் பெயரிடுக.

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

49. தாராண்மைவாத நலன்புரி அரசு முறையில் உள்ள இரு பண்புகளைப் பெயரிடுக.

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

50. 1. தலையிடா அரசு முறையில் பொருளாதார விடயத்தில் அரசின் தலையீடு எவ்வாறு காணப்படுகின்றது?

2. குறைந்தபட்ச அரசு முறையில் பொருளாதார விடயத்தில் அரசின் தலையீடு எவ்வாறு காணப்படுகின்றது.?

1. ..............................................................................................................................................................................

2. ..............................................................................................................................................................................

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

23 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
**First Term Test - Grade 12 - 2018**

அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

சுட்டெண் : ........................ காலம் : 3 மணி

**அறிவித்தல்.**

- **இவ் வினாப்பத்திரம் A,B என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **மொத்தமாக 10 வினாக்களை உள்ளடக்கியது.**
- **ஒரு பகுதியில் குறைந்த பட்சம் இரு வினாக்களையாவது தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**
- **ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி - A

01. அரசியல் மற்றும் அரசறிவியலுக்கு இடையிலான தொடர்பினை விபரிக்குக. (புள்ளிகள் 20)

02. “அரசறிவியல் என்பதால் அறியப்படுவது கல்வித்துறையாக அரசியலைக் கற்றலாகும்.” இதற்கு நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்கான காரணத்தை குறிப்பிடுக. (20)

03. அரசறிவியலின் ஆய்வு அணுகுமுறைகள் தொடர்பாக கருத்துரைக்குக. (20)

04. அரசறிவியலின் பாடப்பரப்பு தொடர்பில் கருத்துக் கூறுக. (20)

05. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது இரண்டின் இயல்பு மற்றும் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுக.
    1. அரசு மற்றும் அரசாங்கம்
    2. அரசியல் கட்சி
    3. அமுக்கக் குழுக்கள்
    4. சிவில் சமூகம் (10 x 2 = 20)

## பகுதி -B

06. சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மையமான அரசின் வகிபாகம் தொடர்பாக கருத்துரைக்குக. (20)

07. தாராண்மை ஜனநாயக மூலக் கொள்கையில் கட்டியெழுப்பப்பட்ட அரசின் இயல்பு தொடர்பாக கருத்துரைக்குக. (10 x 2 = 20)

08. நவீன தேசிய அரசுகளின் ஆரம்பம், இயல்பு மற்றும் வளர்ச்சி தொடர்பில் கருத்துரைக்க. (10 x 2 = 20)

09. அரசு தொடர்பில் முன்வைக்கப்பட்ட பின்வரும் வாதங்களை விளக்குக.
    1. சமூக ஒப்பந்த வாதம்
    2. பெண்ணியல் வாதம் (10 x 2 = 20)

10. பாசிஸவாத சமூக முறையில் அரசின் பணிகள் மற்றும் பிரஜைகளின் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுக. (10 x 2 = 20)

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# முதலாந் தவணைப் பரீட்சை - 2018
# அரசியல் விஞ்ஞானம் - Political Science - தரம் -12
# விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 - 3 | 06 - 4 | 11 - 3 | 16 - 1 | 21 - 3 | 26 - 4 |
| 02 - 5 | 07 - 5 | 12 - 3 | 17 - 3 | 22 - 2 | 27 - 2 |
| 03 - 2 | 08 - 5 | 13 - 4 | 18 - 4 | 23 - 4 | 28 - 1 |
| 04 - 4 | 09 - 4 | 14 - 1 | 19 - 2 | 24 - 5 | 29 - 5 |
| 05 - 1 | 10 - 5 | 15 - 2 | 20 - 5 | 25 - 1 | 30 – 5 |

31. பிளேட்டோ , அரிஸ்டோட்டில்
32. தத்துவவியல் அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை, நடத்தைவாத (விஞ்ஞான) அணுகுமுறை ,பெண்ணியல்வாத அணுகுமுறை, பன்மைத்துவ அணுகுமுறை, அரசியல் பொருளியல் அணுகுமுறை, சமூகவியல் அணுகுமுறை
33. (1) முறைசார் முறை (கல்வித்துறையாகக் கற்றல்)
    (2) முறைசாரா முறை (நடைமுறை அறிவொன்றாகக் கற்றல்)
34. அரசியல் நிறுவனம், அரசியல் பயன்பாடு, ஆட்சி, அரசியல் நடத்தை, அரசியல் கருத்தியல்கள்
35. (1) உண்மையான நடத்தையை மட்டும் கவனத்தில் கொள்ளுதல்
(2) தேவையற்ற மதிப்பீடுகளில் இருந்து விலகியிருத்தல்
    (3) விஞ்ஞானபூர்வமான துறையீடுசார் ஆய்வுமுறை காணபப்பட்டமை
    (4) கலாசார விடயத்தை கவனத்தில் கொள்ளாமை
    (5) அரசியல் மனிதனை பிரதான கருப்பொருளாகக் கொள்ளுதல்
36. தாராண்மைவாதம், சமவுடைமை வாதம், தேசிய வாதம், பாஸிஸ வாதம்
37. மறுமலர்ச்சி, ஒன்றுபடுதல்
38. (1) ஜோன் லொக் (2) தோமஸ் ஹொப்ஸ்
39. (1) சமவுடைமை சமூகம் (2) நவீன கம்யூனிஸ சமூகம்
40. (1) அரசு (2) அரசாங்கம்
41. அரசியல் தத்துவம், அரசியல் கருத்தியல், அரசியல் கோட்பாடு, அரசியல் நிறுவனம், ஒப்பீட்டு அரசியல், சர்வதேச அரசியல், மோதல் மற்றும் மோதல் முகாமைத்துவம்
42. (1) காடர் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் கட்சி.
    (2) பொது மக்கள் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் கருத்துக்களை ஒழுங்கமைக்கும் கட்சி
    (3) அரசியலமைப்புசார் கட்சிகள் மற்றும் புரட்சிகரக் கட்சி
    (4) வலதுசாரி மற்றும் இடதுசாரி கட்சிகள்
43. (1) ஓர் இனத்துக்கு ஓர் அரசு என்ற எண்ணக்கருவின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டமை
    (2) பன்மைத்துவ வாதத்தினை ஏற்றுக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அரசு
    (3) நிச்சயிக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம் மற்றும் இறைமையினைக் கொண்ட அரசு
    (4) சுதந்திர ஊழியச் சந்தை காணப்படும்
44. (1) உலகமயமாக்கலினுள் தேசிய அரசுகள் இறுதியை அடையும்
    (2) அரசு மீள்கட்டமைக்கப்படுதலுக்கு உட்படும்
45. சிறுவர்கள், பெண்கள், வெளிநாட்டவர்
46. (1) தனியார் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கை
    (2) பாராளுமன்ற ஜனநாயக அரசியல் கொள்கை
47. (1) ஜனநாயக அரசாங்க முறை (2) கபஸிஸவாத அரசு
48. (1) நேரடி ஜனநாயகம் (2) தனிநபர் ஆட்சமுறை
49. (1) சமூகத்தின் நலன்புரி நடவடிக்கைகளை மெற்கொள்ளல்
    (2) பொருளாதாரத்தை முகாமைத்தும் செய்தல்
    (3) தனியார் துறையில் குறைந்த கவனம் உள்ள துறையில் அரசு நேரடியாக தலையிடுதல்
50. (1) பொருளாதார செயற்பாட்டில் இருந்து அரசு விலகியிருத்தல்
    (2) பொருளாதார செயற்பாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீடு



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න